விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 188 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 11 வியாழக்கிழமை (25.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கேப்பாப்புலவு காணிகளை விடுவிக்கக்கோரி போராட்டம்

### மக்களை புகைப்படம் எடுத்து இராணுவம் அச்சுறுத்தல்



15ஆம் பக்கம் பார்க்க

## செங்கோலை விழுங்கினாலும் வழக்கு விசாரணையின் வேகம் என்றும் குறையாது

### நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தின் செங்கோலைக் கைப்பற்றினாலும் அல்லது அதை விழுங்கினாலும் தற்போதைய நீதி அமைப்பில் வழக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## ஓகஸ்ட் 9ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே நேற்று நடைபெற்ற ஊடக 15ஆம் பக்கம் பார்க்க

# வவுனியா முதல்வர், சாவகச்சேரி உப தவிசாளர்

## வடக்கு ஆளுநரால் பதவி நீக்கம் வர்த்தமானி ஊடாக அறிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

வவுனியா முதல்வர் சு.காண்டீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஞா.கிஷோர் ஆகியோரைப் பதவிகளில் இருந்து நீக்கியும் உள்ளூராட்சி உறுப்பினர் பதவியை வறிதாக்கியும் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுத்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன்துறையில் தீ விபத்து

## இராணுவத்தினரின் உடைமைகள் சேதம்



15ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி உப தவிசாளர் நீக்கப்பட்டமை அதிகார துஷ்பிரயோகம்

### எக்ஸ் பதிவில் நாமல் எம்.பி



(கொழும்பு)

சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஞா. கிஷோரை பதவியில் இருந்து நீக்கியிருப்பது வெளிப்படையான அதிகாரத் துஷ்பிரயோகம் என்றும் அது ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

## வீதி விபத்துக்களைத் தடுக்க தவறும் பொலிஸார்

### கிளிநொச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

## களப் பணியிலிருந்து விலக கிராம உத்தியோகத்தர்கள் முடிவு

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்கள் நேற்று முதல் அனைத்துக் களப் பணிகளிலிருந்தும் விலக முடிவு செய்துள்ளனர்.

பயணச் செலவுகளுக்குப் போதுமான எரிபொருள் படி வழங்குவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடக 16ஆம் பக்கம் பார்க்க

## தேசிய சூழல் சட்டமூலம்

### சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

தேசிய சூழல் (திருத்த) சட்டமூலம் 103 மேலதிக வாக்குகளினால் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## 33 நாட்களாக கதிர்காமம் பயணிக்கும் யாத்திரிகளுடன் இணைந்த நாய்



(யாழ்ப்பாணம்)

33 நாட்களாக கதிர்காமம் பயணிக்கும் யாத்திரிகளுடன் நாய் ஒன்று இணைந்துள்ளமை பெரும் 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசிலை அழைத்து வந்து நீதியை நிலை நாட்டுவோம்

## அதிரடி காட்டும் அமைச்சர்



(கொழும்பு)

அமெரிக்காவில் இருந்து பசில் ராஜபக்ஷவை விரைவில் கொண்டு வந்து சட்டத்தை நிலை நாட்டுவோம் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பாராளுமன்ற அமர்வில் தெரிவித்திருந்தார்.

முன்னதாக மாத்தறை, எலியகந்த வீதி, பிரவுன்ஷில்லில் அமைந்துள்ள ஒன்றரை ஏக்கர் காணி கொள்வனவு செய்தமை தொடர்பாக, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் பசில் ராஜபக்ஷ உடல்நலக்குறைவு காரணமாக வெளிநாட்டில் சிகிச்சை பெற்று வருவதால் நீதிமன்றத்தில் முன்னிலையாக மாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வழக்கு விசாரணைகளுக்கு பசில் கட்டாயம் முன்னிலையாக வேண்டும் என்று கூறப்படும் சூழலில் பசிலுக்கு சிவப்புப் பிடியாணை பிறப்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.(நி)

# ஜேர்மன் பிரதி உயர்ஸ்தானிகர் தாந்தாமலைக்கு விஜயம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டதும் கிழக்கு மாகாணத்தில் "சின்னக் கதிர்காமம்" எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தாந்தாமலை முருகன் ஆலயப் பகுதிக்கு இலங்கைக்கான ஜேர்மன் பிரதி உயர்ஸ்தானிகர் சாரா ஹசல்பார்த் நேற்று(24) புதன்கிழமை களவிஜயம் மேற்கொண்டார்.

தொல்பொருள் திணைக்களத்தினால் தொல்பொருள் இடமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் களவிஜயத்தின் போது, அப்பகுதியில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் வரலாற்று, தொல்பொருள் சார்ந்த உண்மைத்தன்மைகள் குறித்து அவர் கேட்டறிந்தார். (ம-7)

## இலக்கத்தகடு மோசடி

# முள்ளியவளை பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(முல்லைத்தீவு)

டிப்பர் வாகன இலக்கத்தகடு மோசடியில் ஈடுபட்ட முள்ளியவளைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 2024 டிப்பர் வாகனம் ஒன்றின் நீதிமன்றில் முற்படுத்த வேண்டிய டிப்பரின் இலக்கத்திற்குப் பதிலாக வேறு டிப்பர் ஒன்றின் இலக்கத்தினைப் பயன்படுத்தி நீதிமன்றில் முற்படுத்திய குற்றச்சாட்டில் விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந் நிலையில் நேற்று முன்தினம் சந்தேகத்தின் பேரில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபொழுது அவரை எதிர்வரும் 02.07.2026 வரை விளக்கமறியலில் வைக்கமன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7,316)

# மண்டைதீவு கண்ணகை அம்மனின் கிராம வலமும் பொங்கல் விழாவும்

(மண்டைதீவு)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த கிராமவலம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

தொடர்ந்து எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு வருடாந்த பொங்கல் விழாவும் தீ மிதிப்பும் நடைபெறும். (ந)


திருச்சிற்றம்பலம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# 31 ஆம் நாள் நினைவினில்...

## "ஒளி விளக்கு எம் அன்னை"...க்கு கலை அஞ்சலி

காங்கேசன்துறை பிரதான வீதி "முத்து வாசம்" ... தனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் உடைய

## அமரர் தவராசா ஜெயந்தா (ராணி) (கலை தீபம்)



வையகத்தில் கலை முத்தாக...
29.11.1955

வானகத்தில் கலை வித்தாக...
26.05.2026

எம் இனிய ஈழத் திருநாட்டின் !
முத்தமிழ் வளர்த்தெடுத்து...
வைர மணியாக... பிரகாசமாய் ஒளி வீசி...
கலை முத்தாக வந்துதித்து... வைர முத்து ஐயா...
பெற்றெடுத்த திரு மகளே...!

இப் பிறவியில் ஒருமுறை உமது "கணீர்" எனும்
இனிய குரலோசை...
எம் காதினில்... ஒலிக்காதோ... அம்மா...!

வைரமுத்தாகிய திருமகள்... கலைமகளாகி...
அற்புதமான... கலைநயனமிக்க "இலக்கிய வதி" யம்மாவின்..!
அதிசயமான "கலை ஒளி விளக்கு"
"கலை தீபமாக" பிரகாசிப்பதைக் காண....

கலை வானில்... "கலைச் சுடராய்" மிளிர்ந்து வாசம் புரியும்
தந்தையுடன் இணைந்து...
ஏழேழு பிறவியிலும்...!
"கலை தீபம்" பிரகாசமாய்...!
ஒளி வீசி மிளிர்ந்திட....!
சென்று வா...!
நடிக மணி கண்குளிர்ந்த ....!
கலை மகளே...!
ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...
"கலையரசிக்கு
கலை மடல் சமர்ப்பணம்"
உமது ஆத்மா சாந்தி அடைவதாக...

என்றும் கலை தீபமாய்
ஒளிரும் உமது நினைவுகளுடன்...
சுப்பன் சதீஸ்குமார்
மற்றும்... சகோதரிகள்,
மைத்துனர்மார்கள்

"சூத்திரவளவு"
பளை வீமன்காமம்,
தெற்கு தெல்லிப்பளை.

(7901)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கரைவலைக்கு தடை விதிக்கப்படவில்லை

(கொழும்பு)

“பாரம்பரிய கரைவலை மீன்பிடி முறைமைக்குத் தடை விதிக்கப்படவில்லை. இதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வருடகால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

நாம் கடற்றொழிலாளர்களைக் கைவிடமாட்டோம்” என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு, “கரைவலை மீன்பிடி என்பது ஒரு பாரம்பரிய முறைமையாகும். அந்த முறைமை இலங்கையில் தடை செய்யப்படவில்லை அது தொடர்ந்து முன்னெடுக்கப்படும். எனினும் உழவு இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி, கடல்வளத்தை அழிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் மீன்பிடி நடைமுறைகளே தடை செய்யப்பட்டுள்ளன.

எவ்வித அறிவியல் பூர்வமான ஆய்வுகளும் இன்றி, தமக்குத் தேவையான விதத்தில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடந்த காலங்களில் துறைசார் அமைச்சர்கள் அனுமதி வழங்கியமையாலேயே கரைவலை மீன்பிடித் தொழிலில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டன.

அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே கரைவலை மீன்பிடித் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

கடல் வளங்களை நாசமாக்க இடமளிக்க முடியாது. சட்ட விரோத நடவடிக்கைகளையும் அனுமதிக்க முடியாது. நாம் கடற்றொழிலாளர்களை ஒரு போதும் கைவிடமாட்டோம்.

பாரம்பரியமான முறையில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடலாம் அதற்குரிய புதிய முறைமை உருவாக்கப்படும். எனவே தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டாம். நாம் கால அவகாசம் கோரியுள்ள விடயத்தை வைத்து, அரசியல் நடத்தி மீனவர்களைக் குழப்புவதற்கு எதிர்க்கட்சியினர் முற்படக்கூடாது.

அதேவேளை, இந்திய மீனவர் பிரச்சினை என்பது நீண்டநாள் பிரச்சினையாகும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக தற்போது எல்லைத் தாண்டல்கள் குறைவடைந்துள்ளன என அவர் தெரிவித்தார். (நி)


## கேள்வி அறிவித்தல்
### நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்

**சபை நிதி – 2026**

**Wheel Backhoe Loader வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்**

01. **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** (தொலைபேசி இலக்கங்கள் : 021-222-2700, பக்ஸ் இல : 021-222-0138 e.mail–*npsnallur@gmail.com*) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **25.06.2026** திகதியிலிருந்து **2026.07.08** ஆம் திகதி வரை மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை தமிழ் மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** அலுவலகத்தில் **25.06.2026ஆம்** திகதியிலிருந்து **08.07.2026 ஆம்** திகதி வரை காலை **09.00** மணிக்கும் **15.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/- (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** எனும் முகவரிக்கு **09.07.2026**ஆம் திகதி மு.ப**10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து **77 (எழுபத்தேழு) நாட்கள் (23.09.2026)** வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி முன்னாயத்த கூட்டம் **02.07.2026(வியாழக்கிழமை) மு.ப 11.00** மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விபரம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NPS/2026/ CF– II/JCB | நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட இடங்களில் கைவிடப்பட்டுள்ள நிலையிலுள்ள பற்றைக்காணிகள் துப்பரவு செய்தல், காரைக்கால் தரம்பிரித்தல் நிலையத்தில் தேங்கியுள்ள குப்பைகளைத் தரம் பிரித்தல் மற்றும் அவற்றை வாகனங்களில் ஏற்றுதல் மற்றும் கிடங்குகள் வெட்டுதல். | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் உள்ள நிறுவனமாக இருத்தல் | 35,000.00 | 21.10.2026 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(C-5912) **2026.06.25**

## கேள்வி அறிவித்தல்
### மாநகர சபை - யாழ்ப்பாணம்
### பாவனைக்குதவாத வாகனங்களின் விற்பனை

1) முதல்வர் - மாநகரசபை யாழ்ப்பாணம் அவர்களால் பாவனைக்குதவாத பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல | வாகன இல | வகை / உற்பத்தி | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|---|
| JMC/2026/01 | NP HI 6308 | Agriculture Land Vehicle – JHONEDEERE PY 5203 | 4,000.00 |
| JMC/2026/02 | NP HI 6299 | Agriculture Land Vehicle – JHONEDEERE PY 5203 | 4,000.00 |
| JMC/2026/03 | NP HI 6302 | Agriculture Land Vehicle – JHONEDEERE PY 5203 | 4,000.00 |
| பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்கள் | | | |
| JMC/2026/04 | | Land Vehicle – SAME 503 - I | 500.00 |
| JMC/2026/05 | | Land Vehicle – SAME 503 - II | 500.00 |
| JMC/2026/06 | | HAND TRACTOR Land Vehicle – SHAKTI VWH 120 | 500.00 |
| JMC/2026/07 | | Land Vehicle – LOCALLLY BUILT TRACTOR TRAILER - I | 500.00 |
| JMC/2026/08 | | Land Vehicle – LOCALLLY BUILT TRACTOR TRAILER - II | 500.00 |
| JMC/2026/09 | | Land Vehicle – LOCALLLY BUILT TRACTOR TRAILER - III | 500.00 |
| JMC/2026/10 | | Land Vehicle – NIROSH TRACTOR TRAILER | 500.00 |

2) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 590/= இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 25.06.2026 ஆந் திகதி தொடக்கம் 14.07.2026 ஆந் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் **மாநகர சபை, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
3) கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 25.06.2026 ஆந் திகதி தொடக்கம் 14.07.2026 ஆந் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை **மாநகர சபை வளாகம், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில்** பார்வையிடலாம்.
4) ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களிற்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5) கேள்விதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்விப் பிணைப் பணத்தினை (**Bid Security**) வைப்பாக முன்னரங்க அலுவலகம் மாநகர சபை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் பெயரில்** பணமாக செலுத்துதல் வேண்டும்.
6) கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் **இடது பக்க மேல் மூலையில் ‘கேள்விப் பத்திர மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் - வாகன இல ……………”** எனக் குறிப்பிட்டு 15.07.2026 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **“தலைவர், பெறுகைக் குழு, மாநகர சபை, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது மாநகர சபை அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
7) கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-5911) **2026.06.25**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# மாகாணமட்ட 800 மீற்றர் ஓட்டப்போட்டி சாதனை படைத்த வீரர்கள்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16, 18 மற்றும் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா பாரதிதாசன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். சதுர்ஷன் தங்கப்பதக்கத்தையும் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியைச் சேர்ந்த ஜெ. மதுமிதன் வெள்ளிப் பதக்கத்தையும் முல்லைத்தீவு தேராவில் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. கனிஷ்ரன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.



அத்துடன் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் பூநகரி மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி. ஜோசுவா தங்கப் பதக்கத்தையும் மன்னர் சென் சேவியர் கல்லூரியைச் சேர்ந்த எம்.எம். மவாஷ் வெள்ளிப் பதக்கத்தையும் ஓமந்தை மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். ததுஷாந் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.



மேலும் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர். லதுஷன் தங்கப் பதக்கத்தையும் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். தனுஷிகன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னர் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என். எம். நவ்ரின் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.



18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஆர். கிருஷிகா தங்கப் பதக்கத்தையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கவினா வெள்ளிப் பதக்கத்தையும் முருகன் தேராவில் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி. சுலோகினி வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# ஆண்களுக்கான தட்டெறிதல் மகாஜனக் கல்லூரிக்கு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 14 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். பூர்விகன் 27.31 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.ரிசோபன் வெள்ளிப் பதக்கத்தையும் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். விதுஷன் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# மாகாணமட்ட கோலூன்றிப் பாய்தல் அருணோதயக் கல்லூரி ஆதிக்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 மற்றும் 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீராங்கனைகளான பி. பௌஷிகா, எஸ் திஷனா ஆகியோர் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் அளவெட்டி





அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த பி.பௌஷிகா 2.60 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த பி. வைஷ்ணவி 2.40 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் அதே கல்லூரியைச் சேர்ந்த வி. செகீனா 2.20 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். திஷானா 2.70 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் அதே கல்லூரியைச் சேர்ந்த பி. சண்முகப்பிரியா 2.50 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியைச் சேர்ந்த எஸ். அனுஷா 2.20 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான சமூக ஊடகக் கட்டுப்பாடு சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தனிநபர் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஃபைசர் முஸ்தபாவால் முன்மொழியப்பட்ட இந்த சட்டமூலம், சமூக ஊடகங்கள் மற்றும் இணையச் சேவை வழங்குநர்களுக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதோடு, சிறுவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் இணைய உள்ளடக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு ஆளாவதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் கீழ் இலங்கையில் இயங்கும் சமூக ஊடகச் சேவை நிறுவனங்கள், 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தளங்களை அணுகுவதைத் தடுக்கவும், வயது வரம்புக்கு உட்பட்ட பயனர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கவும் வேண்டியிருக்கலாம்.

அத்துடன் சிறுவர்கள் குறிப்பிட்ட இணையச் சேவைகளைப் பயன்படுத்தும் கால அளவு மற்றும் அவற்றை அணுகக்கூடிய நேரங்கள் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளையும் இச்சட்டமூலம் அனுமதிக்கிறது.

இணையச் சேவை வழங்குநர்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் இந்தக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் விதிமுறைகளை அறிமுகப்படுத்த, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு இம்முன்மொழிவு அதிகாரம் அளிக்கிறது.

இச்சட்டமூலம், இச்சட்டத்தின் விதிகளைச் செயற்படுத்துவதைக் கண்காணிக்கவும், முறைப்பாடுகளை பெறவும், விசாரணைகளை நடத்தவும் மற்றும் சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்தவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆணையாளரை நியமிப்பதற்கான ஏற்பாட்டையும் கொண்டுள்ளது.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்தால், இலங்கைக்குள் உள்ள பயனர்களுக்குச் சேவைகளை வழங்கும் குறிப்பிட்ட சமூக ஊடகச் சேவை வழங்குநர்களுக்கு இது பொருந்தும். (நி)

# தென்னங்கன்றுகளுக்கு புதிய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களிலிருந்து தென்னைச் செய்கையாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில், விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் புதிய காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சின் தகவல்படி, ஒரு தென்னங்கன்றுக்கு 40 ரூபாய் காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்துவதன் மூலம் ஆண்டு தோறும் 550 ரூபாய் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதிகபட்சமாக ஆறு ஆண்டுகள் வரை நீடிக்கும் இந்தத் திட்டத்தில், மொத்தமாக 875 ரூபாய் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தி, ஒரு கன்றுக்கு 12,450 ரூபாய் வரையான காப்பீட்டுப் பாதுகாப்பை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம்.

வறட்சி, வெள்ளம், கடும் மழை, பலத்த காற்று, மண் சரிவு மற்றும் காட்டு யானைகளின் ஊடுருவல் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்த திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்படும்.

இலங்கையின் முக்கிய பயிர்ச்செய்கைத்துறையான தென்னைச் செய்கையை நிலையானதாகப் பேணுவதற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்தத் திட்டம் பெரும் உதவியாக அமையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Auto Mobile Engineer(UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16951

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி
7 இல் செவ்
கி.பா: 36
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: LLM,அரச சட்டவாதி
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16952

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
7 இல் செவ்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: BSC, Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16953

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
2 இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: ACCA, London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16954

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC, MSC, Engineer (Australia)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16955

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
1 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSC, QA Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16963

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: விசாகம்
12 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16964

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 16 ½
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/16965

பிறப்பு: 2005 RC
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: dip inIT, Dip in Graphic Design
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16969

பிறப்பு:2001 RC
நட்சத்திரம்:சதயம்
உயரம்: 5'4"
தகைமை:தொழில்: HNDIT
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/16971

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)



அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான 2026 பொதுத் தகவல் தொழில் நுட்ப (GIT) பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஜூன் 22ஆம் திகதி முதல் ஜூலை 16ஆம் திகதி வரை இணையத்தளத்தின் ஊடாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனைத்து விண்ணப்பங்களும் பாடசாலை அதிபர்கள் அல்லது நிறுவனத் தலைவர்கள் ஊடாகவே சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியாது எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்திக்கா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

www.doenets.lk அல்லது www.onlinexams.gov.lk/eic ஆகிய உத்தியோகபூர்வ இணையத்தளங்களுக்குள் நுழைந்து, அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து, இணையவழி முறைமையின் ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பரீட்சைத் திணைக்களத்தின் 1911 என்ற அவசர அழைப்பு இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆசனப்பட்டிகள் அணியத் தவறிய சாரதிகள், பயணிகள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைகளில் கட்டாய ஆசனப் பட்டிகள் அணியும் விதிமுறைகளைப் பின்பற்றத் தவறிய சுமார் 400 வாகன சாரதிகள் மற்றும் பயணிகள் மீது அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

புதிய விதிமுறை பின்பற்றப்படுவதைக் கண்காணிக்க, அதிவேக நெடுஞ்சாலைகளின் அனைத்து நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களிலும் சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக அதிவேக நெடுஞ்சாலைப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜூன் 20 அன்று நடைமுறைக்கு வந்த விதிமுறைகளின்படி, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களில் உள்ள அனைவரும் ஆசனப்பட்டிகள் அணிய வேண்டும்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் விபத்துகள் ஏற்படும்போது பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், கடுமையான காயங்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கவும் இந்த நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய வீதிப் பாதுகாப்பு சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழ் மக்களின் மனங்களை வெல்ல
# பலாலி விமான நிலையத்தில்
# நடராஜரை பிரதிஸ்டை செய்யுங்கள்
### கலாநிதி பாபு சர்மா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**அநுர அரசு தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டுமெனில் பலாலி விமான நிலையத்தில் நடராஜர் சிலையை உடன் பிரதிஸ்டை செய்ய வேண்டும் என இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா வேண்டுகோள் விடுத் துள்ளார்.**

பலாலி விமான நிலையத்தில் நடராஜர் சிலையை பிரதிஸ்டை செய்ய வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே மேற்குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அக்கோரிக்கையில் யாழ். மாவட்டத்தில் இந்துக்கள் செறிந்து வாழ்ந்து வரும் நிலையில் பலாலி விமான நிலையத்திற்கு அருகே வரலாற்றுச் சிறப்புமிக்க, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளமையும் கருத்தில் கொண்டு, தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டுமாயின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இந்த அரசாங்கம் பலாலி விமான நிலையத்தில் நடராஜர் சிலையை உடன் பிர திஸ்டை செய்ய வேண்டும்.

இதற்கு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் முழு மூச்சுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை தினம் நாளை

(தெல்லிப்பழை)



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் பெருந்தலைவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 18 ஆவது ஆண்டு குருபூசை வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. செல்வி சகுந்தலாதேவி அம்பிகை பாகன் அவர்களும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் தில்லையம்பலம் வரதன் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மூத்த சிவாச்சாரியார்களான நீர்வேலி அரச கேசரி பிள்ளையார் ஆலய ஸ்தானிக சிவாச்சாரியார் சிவஸ்ரீ. சாம்ப.சோமதேவக்குருக்கள், ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ. சோம. சிவகுமாரக்குருக்கள் ஆகியோருக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (8)

# வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள்
## சமாதான நீதிவான்களாகச் சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகள், பதவிநிலை சமாதான நீதிவான்களாக நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டடத்தில், ஊர்காவற்றுறை நீதவான் அனீபா ரஜீவ் முன்னிலையில் இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

22 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, நீதவான் முன்னிலையில் தத்தமது பதவிகளுக்கான சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு அதற்கான ஆவணங்களில் கையொப்பமிட்டனர். (8-33)

# திருமறைக்கலாமன்றம் நடத்தும் கலைச்சாரல் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் கலைச்சாரல் நிக ழ்ச்சி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் திறந்தவெளி அரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிரதேசச் செயலர் திருமதி உமாகாந்தன் சிவகாமி கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி வழங்கும் நடனங்கள்,மெல்லிசை , வீணை இசை போன்றவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் மஹாகவியின் "புதிய தொரு வீடு" நாடகமும் இடம் பெறவுள்ளது.

ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான "மஹாகவி" என்ற புனைபெயரைக் கொண்ட உருத்திரமூர்த்தியினால் 1969 இல் எழுதப்பட்ட "புதியதொரு வீடு" நாடகம் அதனை எழுதத் தூண்டிய அரங்கவியலாளர் அ.தாசீசியசினால் 1971 இல் முதன் முதலாகவும்,அதனைத் தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு நெறியாளர்களினாலும் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளது.

மீனவக் குடும்பமொன்றினை மையப்படுத்தியதான கதைப்பொருளைக் கொண்டுள்ள "புதியதொரு வீடு" நாடகம் புயல் ஒன்றினூடாக சிதைவுறும் குடும்பமொன்றில் ஏற்படும் நெருக்கீடுகளும்,அந்த நெருக்கிடுகளுக்கு தீர்வு காண முற்படும் போது எதிர்பாராது எழுகின்ற சவால்களை மானிடர்களாக நின்று எவ்வாறு எதிர்கொண்டு வாழ்வது என்ற முடிவினையும் கொண்டமைந்துள்ளது.

இந்நாடகம் க.பொ.த( சா.த) நாடகமும் அரங்கியலும் பாடத்தினை பயிலும் மாணவர் களுக்கான பாடநூலாக இருப்ப தும் குறிப்பிடத்தக்கது. (8)

# புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மை யில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தலைவராக கார்திகேசு பாஸ்கரன், உப தலைவராக தங்கவேலு தவறஞ்சன், செயலாளராக குமாரசாமி காந்தரட்ணம், பொருளாளராக கந்தசாமி சுபாஸ்கரன் ஆகியோர் தெரிவு செய்யபப்பட்டனர். (8)

# பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் வயவன் அமுதவிழா மலர் வெளியீடும் நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய இரு தினங்களும் காலை 9 மணிக்கு கல்லூரியின் ஆ.சி நடராஜா மண்டபத்தில் கல்லூரி முதல்வர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி. ஜமுனா ராஜசீலன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் முத்துலிங்கம் ஜெகதாஸன் மற்றும் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பரமேஸ்வரராஜா அருந்தவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரமத விருந்தினராக ஓய்வு நிலை விரிவுரையாளர் ஆறுமுகம் ரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதித்தொழில் ஆணையாளர் திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மனோகரன் பிரதீப் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் ஏற் பாடு செய்யப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின நிகழ்வானது எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சின் செயலாளர் முத்துலிங்கம் நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ் இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.சாய் முரளி மற்றும் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் மகளிர் தினம் 2026 தொடர்பில் நடத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும், திறந்த கவிதை மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கான கௌரவமும் வழங்கப்படவுள்ளது. (8)



பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மகோற்சவத்தின் தேர் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் ஓட்டநிகழ்விற்கான காலணி வழங்கப்பட்டது.

வட்டு மத்திய கல்லூரியின் மாணவர்கள் இருவர் ஓட்ட நிகழ்வில் சிறப்பாக செயற்பட்டதால் அவர்களுக்கான ஓட்டத்திற்குரிய காலணியை உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் அண்மையில் வழங்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குண்டு எறிதல் போட்டி

# இராமநாதன் கல்லூரி மாணவிக்கு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த கே.பிரணவி புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த கே. அபிஷானி 9.70 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் சென்.சேவியர் கல்லூரியைச் சேர்ந்த என்.டொறின் ஜீவனா 9.37 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# கோட்டாவின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் தன்னை கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தாக்கல் செய்துள்ள மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டாவது நாளாக நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் சரத் திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

நேற்றைய நீதிமன்ற அமர்வின் போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மேலதிக கருத்துகளை முன்வைத்தார்.

இதன்பின்னர், இந்த மனு மீதான மேலதிக விசாரணை மற்றும் சமர்ப்பணங்கள் வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (நி)

# உலங்கு வானூர்திகளை வழங்கிய அமெரிக்கா



(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட TH-57 சீ ரேஞ்சர் (TH-57 Sea Ranger) ரகத்தைச் சேர்ந்த 10 பல்பணி உலங்கு வானூர்திகள் நேற்று முன்தினம் இலங்கை வான் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இலங்கை வான் படையின் விமானிப் பயிற்சித் திறன்களை மேம்படுத்துவதற்கும், அதன் செயற்பாட்டுத் திறனை வலுப் படுத்துவதற்கும் இந்த உலங்கு வானூர்திகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த TH-57 சீ ரேஞ்சர் உலங்குவானூர்திகள் அனர்த்த நிவாரணம், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் அவசரகால பொதுச் சேவை நடவடிக்கைகள் உள்ளிட்ட பரந்த அளவிலான செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்பாதுகாப்புப் பணிகளுக்கான வான்படைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் இவை பயன்படுத்தப்படவுள்ளன. (நி)

# போதைப்பொருளுடன் சிக்கிய கனேடிய யுவதி

(கொழும்பு)

பல மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய ஹஷீஷ் போதைப் பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டு யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு இந்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 18 வயதுடைய கனடா நாட்டைச் சேர்ந்த யுவதி என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் மதிப்பு 352 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், சந்தேக நபரும், கைப்பற்றப்பட்ட போதைப்பொருளும் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆண்டுவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(அளவெட்டி)

அளவெட்டி ஞானோதய நம்பிக்கை நிதியத்தின் ஆண்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பன்னாலை வரத்தலம் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அளவெட்டி ஞானோதய நம்பிக்கை நிதிய தலைவர் மங்களம் மணிசேகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (8)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார்
அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம்
மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்
தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை,
குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

(C-5908)

**074 196 4945, 076 682 7368**

**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



## ST. JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY

Applications are hereby invited from qualified persons (preferably graduates in the relevant field) for the following vacancy:

**Teacher – Science (English Medium) - Grade 6 - 11 Classes**

Send your complete CV with the contact details of two non-related referees, along with the photocopies of relevant educational and professional certificates, by registered post to the address given below before 03rd July 2026.

Please indicate **"Applications / Science Teacher (EM)"** at the top left-hand corner of the envelope.

*(Only shortlisted candidates will be called for an interview)*

**The Principal,**
**St. John's College,**
**Jaffna.**


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம் 74/5, புளியடி ஒழுங்கை, வட்டாரம் 11**

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11, புளியடி ஒழுங்கை, ஆதன இலக்கம் **74/5** என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் சிவன் கோவில் ஆதனம் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக சதாசிவம் சண்முகம் பெண் மகேஸ்வரி என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கும் மிகுதியாதனத்திற்கும் கனகன் பரமகுருவும் பெண் ஈஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முன்பாக 14.07.1999 ஆம் திகதியில் 2978 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரகடன உறுதியினை நிறைவேற்றியிருந்தனர் என்றும் குறித்த ஆதனம் ஆரம்பத்தில் முருகன் ஐயாத்துரையும் பெண் மாரிமுத்துவுக்கும் சொந்தமாக விருந்தது என்றும் குறித்த ஆதனத்தில் இருந்த கொட்டில் வீட்டிலேயே வசித்து வந்ததாகவும் 1959 ஆம் ஆண்டு குறித்த வீட்டிலேயே ஈஸ்வரி பிறந்ததாகவும் 1983 ஆம் ஆண்டு திருமணம் செய்த பின்னர் குறித்த ஆதனத்திலேயே குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும் வெளிப்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் முழு ஆதனத்தில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 3/4 முக்கால் விஸ்தீரணமுடைய ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முன்பாக 2009.12.04 ஆம் திகதியில் 10863ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறதியால் சதாசிவம் சண்முகத்துக்கும் மகேஸ்வரிக்கும் அறுதியாக விற்றிருந்தனர்.

இது தற்போது உத்தரவுபெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களால் 2025.10.25 திகதியில் 3005 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட (குளி 12.60 விஸ்தீரணமுடையது) ஆதனமாகும்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
ஆதனப்பெயர் : **குடவை**
இறை: அராலி வடக்கு இறை
விஸ்தீரணம் நிலப்பரப்பு 3/4 அளவின்படி நிலப்பரப்பு 0 குளி 12.60

எல்லைகள் **கிழக்கு:** வயித்தி சிவராசாவினாதனம் தற்போது அணுகுவழி. **வடக்கு:** ஒழுங்கை, **மேற்கு:** அப்பையா பெண் சரசுவீனாதனம், **தெற்கு:** கதிரன் சின்னத்தம்பியினாதனமும், செல்லத்துரைக்கும் பெண் நாகம்மாவுக்குமுரியவாதனமும் (மிகுதியாதனம்)

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சதாசிவம் சண்முகம் பெண் மகேஸ்வரி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

(7911)

**தவிசாளர் /செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

# நடிகர் மம்முட்டி, மாதவனுக்கு பத்ம விருதுகள் வழங்கி வைப்பு



(டில்லி)

கலை, இலக்கியம், சமூக சேவை, வைத்தியம் மற்றும் அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கு இந்தியாவின் உயரிய குடிமக்கள் விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்மஸ்ரீ போன்ற பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இதன்படி இந்த ஆண்டும் அறிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு 5 பத்ம விபூஷண் விருதுகள், 13 பத்மபூஷண் விருதுகள் மற்றும் 113 பத்மஸ்ரீ விருதுகள் என மொத்தம் 131 விருதுகளை உள்துறை அமைச்சகம் அறிவித்தது. இதில் முதற்கட்டமாக கடந்த மாதம் 25 ஆம் திகதி 66 பேருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், இரண்டாம் கட்டமாக நேற்று 65 பேருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டன. டில்லியில் இந்திய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்று வரும் இந்த விருது வழங்கும் விழாவில் இந் தியப் பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

நடிகர் மம்முட்டி, மாதவன், கிரிக்கெட் வீரர் ரோகித் சர்மா, உள்ளிட்டோருக்கு பத்ம விருதுகளை வழங்கி இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு கௌரவித்தார். (3)

# தாய்வான் நீரிணையில் அதிரடி காட்டும் சீனா

(பேங்காக்)

சீனாவின் மிகவும் நவீனமான மற்றும் மேம்பட்ட விமானம் தாங்கி போர்க் கப்பலான "புஜியான்", பதற்றம் நிறைந்த தாய்வான் நீரிணைப் பகுதி வழியாகப் பயணம் செய்துள்ளதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு இந்த முக்கியமான நீர்வழியில் சீனா மேற்கொண்டுள்ள முதல் பெரிய இராணுவ நடவடிக்கை இதுவாகும். தாய்வானைத் தனது சொந்தப் பகுதி என உரிமை கோரும் சீனா, அங்கு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகத் தொடர்ந்து இராணுவ அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது.

இந்த நிலையில், புஜியான் போர்க்கப்பலின் நகர்வுகளைத் தங்களது கூட்டு உளவுத்துறை மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் மூலம் மிக உன்னிப்பாகக் கண்காணித்ததாக தாய்வான் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

தாய்வான் நீரிணைப் பகுதி தங்களுக்கு மட்டுமே சொந்தமானது என சீனா கூறி வரும் வேளையில், இது ஒரு சர்வதேச நீர்வழிப்பாதை என்று தாய்வானும் அமெரிக்காவும் வாதிட்டு வருகின்றன.

சீனாவின் இந்தத் தொடர் அச்சுறுத்தல்களுக்குப் பதிலளித்துள்ள தாய்வானின் முக்கிய கொள்கை வகுப்பாளர் சியு சூ-செங், சீனாவின் இத்தகைய இராணுவ மிரட்டல்களுக்கு தாய்வான் ஒருபோதும் பணியாது என்றும், தங்களது இறையாண்மையையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கத் தாய்வான் மக்கள் உறுதியாக இருப்பார்கள் என றும் தெரிவித்துள்ளார். (3)



# போர் நிறுத்

# தக்க பதிலடி

## இஸ்ரேலை எச்

(ஜெருசலேம்)

**இஸ்ரேல் போர் நிறுத்தத்தை மீறும் பட்சத்தில் ஹி புல்லாவின் லெபனான் கு பதிலடி கொடுக்கும் என் எச்சரித்துள்ளதாக சர்வதே ஊடகங்கள் செய்தி வெ யிட்டுள்ளன.**

ஹிஸ்புல்லாவின் அரசியல் மன்றத்தின் துணைத் தலைவர் மஹ்மூத் கமாதியை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஹிஸ்புல்லாவின் பதிலடியும் இஸ்ரேலைப் போலவே இருக்கும் என்று கூறிய இந்த அமைப்பு, போராளிகள் துப்பாக்கிச் சூடு நடத்தாமல் இருந்த போதி

# சொந்த நாட்

# கொன்ற மியன்ம

## ஐ. நா அதிர்ச்சித் தகவல்

(நைப்பிடோவ்)

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆறு மாத காலத் தேர்தல் காலகட்டத்தில், 700 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்தத்கு மியன்மார் இராணுவம் பொறுப்பேற்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.

2025 ஆகஸ்ட் முதல் ஜனவரி வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கிய புதிய அறிக்கை ஒன்றின்படி, 224 பெண்கள் மற்றும் 153 குழந்தைகள் உட்பட குறைந்தது 702 பேர் கொல்லப்பட்டதை நம்பகமான ஆதாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

மியன்மாரில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொண்ட இராணுவம் தேர்தலை அறிவித்ததிலிருந்து தொடங்கி ஆறு மாத காலத்தை இது உள்ளடக்கியது.

முக்கிய எதிர்க்கட்சிகள் விலக்கி வைக்கப்பட்டதால், இத்தேர்தல் செயல்முறை பரவலாக ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே விமர்சிக்கப்பட்டது.

மியன்மார் இராணுவம் 2021 இல் ஆட்சிக்கவிழ்ப்பை நடத்தியது, இது ஒரு உள்நாட்டுப் போரைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

# ...த்தம் மீறப்பட்டால் ...டி வழங்கப்படும்

## ...எச்சரிக்கும் ஹிஸ்புல்லா!

...த்ததை
...ஹிஸ்
... குழு
...ன்று
...வதேச
...வெளி



...லும், இஸ்ரேலியப் படைகள் லெபனான் மீது கிட்டத்தட்ட தினசரி தாக்கு தல்களைத் தொடுத்தி ருந்தது என்றும் குற்றம் சுமத்தி யுள்ளது. இது எப்போதும் போருக்கு முந்தைய நிலை மைக்குத் திரும் புதல் போல இருக்காது என்றும் எச்ச ரித்ததாக அடிகோடிடப்பட் டது. இஸ்ரேலிய ஆட்சி யின் எந்தவொரு மீறலையும் எதிர்கொள்ளத் தயாராக, ஹிஸ்புல்லா முழு எச்சரிக் கையுடன் ஆயுதத் தூண்டு தலில் உள்ளது. (3)

# பறவைக் காய்ச்சல் பரிசோதனையை தீவிரப்படுத்தியது அவுஸ்திரேலியா




(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் மிகவும் ஆபத்தான H5N1 பறவைக்காய்ச்சல் பாதிப்பு இரு இடங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து, அந்த நாட்டில் கண்காணிப்பு மற்றும் பரிசோதனைகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அவுஸ் திரேலியாவிலிருந்து கோழி இறைச்சி மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பொருட் களை இறக்குமதி செய்வ தற்கு பப்புவா நியூ கினியா தற்காலிகமாகத் தடை விதித்துள்ளது.

மேற்கு அவுஸ்திரே லியாவில் முதல் இரண்டு பாதிப்புகள் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது தெற்கு அவுஸ்திரேலியா வின் பௌலர்ஸ் பே பகுதி யில் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட கடல் பறவைகளின் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப் பப்பட்டுள்ளன.

இதுவரை பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லாத ஒரே கண்டமாக இருந்த அவுஸ்திரேலியாவில், தற்போது வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கோழிப்பண்ணை துறை யில் இதுவரை வைரஸ் பாதிப்பு இல்லை என அதி காரிகள் தெரிவித்துள்ள போதிலும், பப்புவா நியூ கினியாவின் இந்தத் தடை அவுஸ்திரேலியாவின் ஏற்று மதிக்குச் சவாலாக மாறியுள் ளது.

பறவைக்காய்ச்சல் மனி தர்களுக்குப் பரவும் அபாயம் குறைவு என்றாலும், உல களாவிய ரீதியில் கோழி இறைச்சி மற்றும் முட்டை விநியோகத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள் ளது.

இதனால் அவுஸ்தி ரேலிய அரசாங்கம் பண் ணைகளில் உயிரியல் பாது காப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. (3)

# ...ட்டு மக்களை ...மார் இராணுவம்

...ல்



தூண்டியது, அதில் ஆயிரக்கணக் கான மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் மில்லியன் கணக் கானோர் இடம்பெயர்ந்தனர்.

நாட்டின் பெரும் பகுதிகள் ஆயுதமேந்திய எதிர்க்கட்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஐ.நா.வின் மனித உரி மைகள் அலுவலகத்தின் அறிக்கை, வான்வழித் தாக் குதல்களே அழிவுக்கும் துன்பத்திற்கும் மிகப்பெரிய ஒற்றைக் காரணமாகத் தொடர்கின்றன என்று குறிப்பிடுகிறது. (3)

# நைஜீரியாவில் 20 அப்பாவி பொதுமக்கள் சுட்டுக் கொலை

(நைஜர்)

நைஜீரியாவில் பொக் கோஸ் நகரில் உள்ள காவெல் கிராமத்தில் நள்ளி ரவில் மர்மக் கும்பலால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலில் ஸ்தலத்தி லேயே 20 பேர் உயிரிழந் ததாக சர்வதேச ஊடகங் கள் தெரிவிக்கின்றன.

ஆயுதமேந்திய சிலரால் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்ப டுத்தியுள்ளது.

துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டு அப்பகுதியில் உள்ள வீடுகளில் உறங் கிக்கொண்டிருந்த மக்கள் அலறியடித்து வெவ்வேறு திசைகளை நோக்கி ஓடிய தாகவும் அவ்விதமாக தங்கள் உயிரைக் காப்பாற் றிக்கொள்ள ஓடிய பொது மக்கள் மீது அந்த மர்மக் கும்பல் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் கூறுகின்றனர்.

தாக்குதல் தொடர்பாக தகவலறிந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்ற போது, தாக்குதல்தாரிகள் காட்டுப்பகுதிக்குள் தப்பிச் சென்றுவிட்டதாக அதிகா ரிகள் மேலும் குறிப்பிடுகின் றனர். ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் பல இடங்க ளில் அண்மைக்காலமாக வன் முறைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படு கிறது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய வடை தயாரிப்பு நிலையத்திற்கு சீல்!

(மன்னார்)

மன்னார், பள்ளிமுனை பிரதான வீதியில் இயங்கி வந்த வடை தயாரிப்பு நிலையம் ஒன்று சுகாதார விதி முறைகளை மீறிச் செயற்பட்டமை கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, அதிகாரிகளால் நேற்று முன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது இந்த சுகாதார மீறல்கள் கண்டறியப்பட்டன.

ஆய்வின் போது, மனிதர்கள் பயன்பாட்டிற்கு ஏற்றதல்லாத மற்றும் மிகவும் சுகாதாரமற்ற சூழலில் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வந்தமை உறுதி செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், கோழிகள், புறாக்கள் மற்றும் பிற செல்லப்பிராணிகளின் கழிவுகள் காணப்பட்ட அசுத்தமான சூழலில் உணவு தயாரிக்கப்பட்டிருந்ததோடு, உணவு தயாரிப்பு நிலையத்தின் ஒட்டுமொத்த சுகாதார நிலையும் மிகவும்



மோசமாக இருந்ததாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த நிலையத்தின் உணவு தயாரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறு அதன் உரிமையாளருக்கு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டிய அனைத்து குறைபாடுகளையும் முழுமையாக நிவர்த்தி செய்து, இடத்தை சுத்தப்படுத்தி, தேவையான அனுமதிகளை மீண்டும் பெற்ற பின்னரே நிலையத்தை மீள இயக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8-285)

### தலைவர் கிண்ண உதைபந்தாட்டம்

# ரேஞ்சர்ஸ்- வல்வை அணிகளுக்கு இடையிலான போட்டி சமநிலை



(கரணவாய்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்போட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்ட போட்டித் தொடரின் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ரேஞ்சர்ஸ் - வல்வை அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே வல்வை அணி தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்திய நிலையில் முதலாவது கோலினை அடித்து முன்னிலை பெற்றது. கிடைத்த சந்தர்ப்பத்தில் ரேஞ் சர்ஸ் பதில் கோல் அடித்து சம நிலையாக்கியது. விறுவிறுப் பாக இடம்பெற்ற இவ் ஆட்டத்தின் இரண்டா வது பாதியில் இரு அணிக ளும் கோல் அடிக்க கடுமையாக முயற்சித்த போதிலும் பலனளிக்கவில்லை.

இறு தியில் ஆட்டம் 1 : 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுக்கு வந்தது. இதையடுத்து இரு அணிக ளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளி வழங் கப்பட்டது.

ரேஞ்சர்ஸ் அணியின் இலக்கு காப்பாளர் முகுந்தன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டுப் பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டார். (3-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 130 | 200 | 200 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 210 | 200 | 220 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 800 | 550 | 600 |
| தக்காளி | 850 | 800 | 800 | 800 | 850 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 250 | 200 | 200 | 160 |
| கோவா | 250 | 250 | 350 | 250 | 250 | 200 |
| கரட் | 350 | 400 | 500 | 400 | 400 | 350 |
| பூசணி | 120 | 140 | 150 | 200 | 130 | 120 |
| புடோல் | 140 | 150 | 200 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 200 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 400 | 200 | 340 |
| பெரிய வெங்காயம் | 200 | 240 | 200 | 200 | 200 | -- |
| பாகற்காய் | 1200 | 1500 | 1500 | 1800 | 1000 | -- |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 400 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 300 | 400 | -- | -- |
| பயற்றங்காய் | 300 | 500 | 600 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 400 | 400 | 400 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 350 | 400 | 400 | 600 | 600 | 480 |
| கறிமிளகாய் | 450 | 500 | 600 | 500 | 500 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 2000 | 1000 | 1100 | 1400 |
| போஞ்சி | 650 | 500 | 600 | 600 | 500 | 550 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | 160 | -- | -- |
| கீரை – 1 பிடி | 50 | 40 | 50 | 100 | -- | 70 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 100-140 | -- | 190 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 330 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 500 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 200 | 250 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 | -- | 40 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 240 | -- | -- |


# இராசிபலன்

25.06.2026
ஆனி 11 வியாழக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.43 மணிவரை


சுவாதி முன்னிரவு 7.23 மணிவரை
சுப நேரம் -7.25-8.55 மணிவரை
இராகு காலம் -1.25-2.55மணிவரை

ஏகாதசி விரதம், சுப முகூர்த்த நாள்
சந்திராஷ்டமம்-
உத்தரட்டாதி, ரேவதி


**வளவன்**





தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேர லாம், விருந்தினர் வருகையுண்டு , பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, காரிய அனுகூலமுண்டு.




தொலை தூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நம்பிக்கைகள் நடைறெ இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.




செலவுக்கேற்ற வருமானம் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




நண்பர்களால் நன்மையுண்டு, நினைத்தது நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட நன்மையுண்டு, பிணக்குகளால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




குடும்பத்தில் குதூ கலம் கூடும், தொழி லில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.




பணத்தேவைகள் எளிதில் பூர்தியாகலாம்,வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், மக்கள் போற்றும் வாழ்வமைய இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தினரி டையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

நண்பர்கள் மனிதனின் குணத்தைக் காட்டும் கண்ணாடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02

XXIX

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்

ஆரியகுளம் நாக விகாரை

நயினாதீவு நாகதிப ரஜ மகா விகாரை

(நேற்றைய தொடர்ச்சி)

இலங்கைத் திருநாட்டில் பௌத்தர்களும் சைவர்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழக்கூடிய ஏதுக்கள் இருந்த போதிலும் அஃது சாத்தியப்படாமல் போனமை துரதிர்ஷ்டமே.

அதேநேரம் பௌத்தர்கள் சைவாலயங்களுக்குச் சென்று வழிபாடாற்றுவது போல, சைவர்களும் பௌத்த விகாரைகளுக்குச் சென்று வழிபாடாற்றுகின்ற நடைமுறைகள் இருந்திருக்குமாயின், இத்தனை தூரம் இன-மத வாதம் தலைவிரித்தாடியிருக்க வாய்ப்பில்லை.

ஆம், பௌத்தர்கள் நல்லூர்க் கந்தனை வழிபட்ட போது, நயினாதீவு நாகபூசணி அம்மனைத் தரிசித்த போது, சைவ மக்கள் யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபாடாற்றியிருக்க வேண்டும். ஆனால் அதை நம் சைவ மக்கள் ஒருபோதும் செய்யவில்லை.

அதேநேரம் கிறிஸ்தவர்கள் சைவாலயங்களுக்குச் செல்வதை-சைவக் கடவுள்களை வழிபடுவதை ஒருபோதும் செய்யவில்லை.

அதிலும் சில கிறிஸ்தவ மதமாற்ற சபைகள் சைவக் கடவுள்களை சாத்தான்கள் என்றும் சைவக் கடவுள்களுக்கு நிவேதனம் செய்த பிரசாதங்களை சாத்தானுக்குப் படைக்கப்பட்டவை என்றும் ஆதலால் அவற்றைத் தாம் உண்ணவில்லை என்றும் கூறி, அதைப் புறந்தள்ளுவதையும் நாம் கண்டுள்ளோம்.

அதிலும் மேற்குறிப்பிட்ட மதமாற்ற சபை சார்ந்த சில அரச அதிகாரிகள் தத்தம் அலுவலகங்களில் இடம்பெறும் சரஸ்வதி பூசை வழிபாடுகளைத் தவிர்ப்பதையும் அலுவலகத்தில் உள்ள சைவக் கடவுள் படங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தியதுமான தகவல்கள் நம் செவிகளை முட்டிச் சென்று நம் மனங்களை ரணமாக்கியமையும் நடந்தாயின.

இதில் வேடிக்கை என்னவென்றால், சைவக் கடவுள்களைச் சாத்தான்கள் என்று கூறுபவர்கள் வேறுயாருமல்லர்.

இவர்கள் சைவ சமயத்தில் இருந்து மதம் மாறியவர்கள் என்பது தான் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய கசப்பான உண்மை.

ஆம், காலாகாலமாக சைவ சமயத்தில் இருந்தவர்கள்; மதம் மாறியதும் சைவக் கடவுள்களைச் சாத்தான்கள் எனக் கூறுகிறார்கள் என்றால், அவர்களுக்குக் கிடைத்த நிதி உதவி உள்ளிட்ட இதர உதவிகள் எத்துணை என்பது ஊகித்தறியத்தக்கது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும். அதாவது கிறிஸ்தவ சமயத்தவர்கள் சைவக் கடவுளை வழிபடுவதற்கும் சைவாலங்களுக்கு வருவதற்கும் தயாரில்லாத போது, சைவ மக்கள் மடுமாதாவின் தேவாலயத்திற்கும் மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கும் மன்னார் பாம்பு வழிகாட்டி அந்தோனியார் தேவாலயத்திற்கும் ஊர்காவற்றுறை ஒழுவில் வேளாங்கன்னி மாதாவிடமும் செல்வதைத் தவிர்ப்பதில்லை.

இங்குதான் சைவ சமயத்தவர்களிடம் அறமும் நீதியும் இல்லாமை தெரிகிறது.

ஆம், சைவக் கடவுள்களை வழிபடுகின்ற பௌத்த சிங்களவர்களை மதித்து, விகாரைகளுக்குச் செல்லாத நம்மிடம் ஒரு பொது நீதி இல்லை என்பதனை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும் போது மடுமாதாவையும் மானிப்பாய் அந்தோனியாரையும் வழிபட வேண்டாமென நாம் கூறவில்லை. மாறாக, எங்கள் வழிபடு கடவுளாகிய பிள்ளையார் இருக்கக் கூடிய பௌத்த விகாரைகளுக் கும் நாம் சென்று வழி பாடு செய்ய வேண்டும். அதுவே நீதியும் அறமுமாகும்.

### பௌத்தர்கள் மதம்மாற்றவில்லை

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற நினைப்பு பெரும்பான்மை இன ஆட்சியாளர்களிடம் இருந்ததாயினும் சைவ சமயத்தவர் உள்ளிட்ட எந்தச் சமயத்தவர்களையும் பௌத்த மதத்திற்கு மாற்றுகின்ற நடவடிக்கையில் அவர்கள் அறவே ஈடுபடவில்லை.

அதாவது, கிறிஸ்தவ-இஸ்லாமிய மதங்கள் மதமாற்றத்தைப் பிரதானமாகக் கொண்டிருக்க, பௌத்தர்களிடம் மதமாற்றம் என்ற நினைப்பு அறவே இருக்கவில்லை.

இதற்கு, பௌத்தம் இந்து சமயப் பின்னணியைக் கொண்டுள்ளமையும் முக்கிய காரணம் எனக் கூறினால் அது மறுதலிப்புக்குமுரியதல்ல.

**புருசோத்தமன்**

(நாளை தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1072





தேவி! பத்துத் தலை இராவணேசுவரனுடைய கைகளை உடைப்பதற்கு என் அத்தைப் பிரயத்தனப்பட்டாளே? அது எதற்கு என்று தெரியுமா?" "தெரியாது உனக்குத் தெரிந்தால் உடனே சொல்லு!" "என் அத்தை இராவணன் கரங்களைத் தகர்க்க முயன்றதைப் பார்த்தபோது நீங்கள் எல்லாரும் அவளைப் பிச்சி பைத்தியக்காரி என்று நினைத்தீர்கள்.

ஆனால் என் அத்தை பிச்சி அல்ல. அந்த இராவணன் கைகளுக்கு மத்தியிலேதான் பழுவேட்டரையரின் நிலவறைப் பொக்கிஷத்துக்குப் போகும் சுரங்கப்பாதை இருக்கிறது."

"ஆகா! அப்படியா?" என்று குந்தவை அதிசயித்தாள்.

"ஈழத்து ஊமை ராணி சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு எப்படி வந்தாள் என்பதும் தெரிகிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இத்தனை நாளும் அரண்மனையிலிருந்த நமக்கு அப்படி ஒரு சுரங்க வழி இருப்பது தெரியாமற் போயிற்றே? இருக்கட்டும், நீ ஏன் உடனே அரண்மனைக்கு வந்து எங்களிடம் இதையெல்லாம் சொல்லவில்லை? உன் அத்தையைத் தனியாக விட்டுவிட்டு ஏன் வந்துவிட்டாய்?" என்றாள் இளையபிராட்டி.

"அத்தையின் பிடிவாதந்தான் காரணம். அங்கே ஒளிந்திருப்பவனைத் தான் பார்த்துக்கொள்வதாகச் சொல்லி என்னை வெளியே அனுப்பி விட்டாள்!" "ஏன்? ஏன்? அதைவிட முக்கியமான காரியம். எதற்காகவாவது உன்னை அனுப்பினாளா?" "ஆம், அம்மணி!"

"அது என்ன பெண்ணே?"

"பொன்னியின் செல்வருக்கும் ஏதோ ஆபத்து வரப்போகிறது என்று என்னுடைய அத்தை தன் அதிசய சக்தியினால் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் இருக்குமிடத்துக்குப் போகும்படி என்னை அனுப்பி னாள்!" "ஆகா! பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தை தேடித்தான் நீ போய்க் கொண்டிருந்தாயா? அப்படியானால் ஏன் நின்று விட்டாய்?"

"இல்லை, தேவி! உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அரண்மனைக் காரியங்களில் இனிமேல் தலையிடுவதில்லையென்று தீர்மானித்து விட்டேன். கோடிக்கரைக்குப் போய்க் கொண்டிருந்தேன் வழியில் இந்த வீர வைஷ்ணவன் என்னைச் சந்தித்து இங்கே அழைத்துக் கொண்டு வந்தான்! நீங்கள் இருப்பது தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்!"

"பெண்ணே! அரண்மனை உனக்கு ஏன் அவ்வளவு வெறுத்துப் போய்விட்டது? எங்களை ஏன் பிடிக்காமல் போய் விட்டது? உன்னை யார் என்ன செய்து விட்டார்கள்?" என்று இளைய பிராட்டி குந்தவை கேட் டாள்.

"என்னை யாரும் எதுவும் செய்துவிடவில்லை. யார் பேரிலும் எனக்குக் குறையும் இல்லை. சில பேருக்குச் சிம்மாசனம் பிடிக்காமலிருப்பதுபோல் எனக்கும் அரண்மனை வாழ்வு பிடிக்கவில்லை, அவ்வளவுதான்!" என்று பூங்குழலி கூறிவிட்டு, வானதியைக் கடைக் கண்ணால் பார்த்து நகைத்தாள்.

அதைக் கவனித்து வானதி ஆவேசம் வந்தவள் போல் ஓர் அடி முன்னால் வந்து கூறினாள்:- "அக்கா! இவள் மறுபடியும் என்னைத் தான் ஏசிக் காட்டுகிறாள். நான் சொல்கிறேன் கேளுங்கள், தங்கள் திருப்பாதங்களின் மீது ஆணையாகச் சொல்கிறேன். ஆகாசவாணி, பூமாதேவி சாட்சியாகச் சபதம் செய்கிறேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## இளவரசி தேவயானி



தேவயானி இளவரசிதான் ஆனால் அரச குலத்தில் பிறந்தவள் கிடையாது. மரகத நாட்டு இளவரசர் தேவகுமாரனைத் திருமணம் செய்து கொண்டதால் இளவரசியானவள். அவள் ஒரு உபாத்தியாயரின் மகள். கலாசாலை ஒன்றில் கற்கச் சென்ற இடத்தில்தான் தேவகுமாரன் அவளைச் சந்தித்தான். கண்டவுடன் அவள் மீது மையல் கொண்டான்.

தேவகுமாரன் மன்னரிடம் தனது விருப்பத்தைச் சொன்ன போது அவர் மனம் அதிர்ந்து போனார். எத்தனையோ தேசங்களின் அரசர்கள் தங்களது புத்திரியை அவனுக்கு மண முடிக்க இருக்க அவருக்கு இப்படி ஒரு எண்ணம் வந்தது. தேவகுமாரனுக்கு மணம் செய்விக்கத் தயாராய் இருந்தனர். ஆனால் அவனோ ஒரு ஏழை உபாத்தியாயரின் மகளை மணக்க விரும்புகிறானே? என மன்னர் மனம் வெதும்பினார்.

இருந்தாலும் அவர் தேவகுமாரனின் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை. அவளையே அவனுக்கு மணம் செய்வித்தார்.

மணம் செய்வித்து விட்டாரே ஒழிய அரச குலத்தில் பிறவாதவள் என்பதால் அவரால் தேவயானியை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இன் முகம் காட்டாமல் அவளைப் புறக்கணித்தே வந்தார்.

மன்னருக்கு இரண்டு புதல்வர்கள். மூத்தவன்தான் தேவகுமாரன். தேவயானியின் கரம் பற்றியவன். மன்னர் இளையவன் ராஜகுமாரன். அவருடைய காலத்திற்குப் பின்னால் மூத்தவன் என்ற முறையில் தேவகுமாரனுக்குத் தான் முடி சூட்ட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்ய அவர் விரும்பவில்லை. அவன்தான் அரச குலத்தில் பிறவாத பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டானே? அவர் இளையவனுக்கே முடிசூட்ட விரும்பினார்.

மேலும் இளையவன் தனது சகோதரன் போன்று கிடையாது. அரச குலத்திற்கே உரித்தான செருக்கும் தறுக்கும் நிறையப் பெற்றவன். ராஜ்யத்தின் எல்லைகளை விரித்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆவல் கொண்டவன்.

ஒருவேளை அவனுக்கு முடி சூட்டினால் மூத்தவன் இருக்க இளையவனுக்கு முடி சூட்டுவதா என்ற குடி மக்களின் அதிருப்தியை எதிர்கொள்ள வேண்டியிருக்குமே? மன்னர் யோசித்தார். அவருக்கு இப்படி ஒரு எண்ணம் வந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது பின்சென்று அடும்.
- திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாடகத்துக்கு வந்த கேடு போல நம் கூட்டங்களுக்கும் அதே கேடு

ஒரு காலத்தில் நம் மண்ணில் ஆலயத் திருவிழாக்கள் என்றால் நாடகங்கள் களை கட்டும்.

வி.வி.வைரமுத்துவின் அரிச்சந்திர மயான காண்டம், வடக்கும் தெற்கும், வெளிக்கிட்டி விசுவமடு போன்ற நாடகங்கள் ஆலய வெளி வீதியில் அமர்க்களமாக, நம்மவர்கள் ஆலய பூசை வழிபாட்டிற்குச் செல்லா விட்டாலும் நாடகம் பார்க்கக் கட்டாயம் செல்வார்கள்.

அந்தக் காலத்து நாடக அரங்குகளை அலங்கரிக்கும் அடுக்குத் திரைச் சீலைகள் நாடகக் கலைஞர்களின் ஒப்பனைக்காக சாக்குப் படங்குகளால் மூடி மறைக்கப்பட்ட நாடக மேடையின் பின்பகுதி.அந்த சாக்குப் படங்கில் எப்படியாவது துளையிட்டு உள்ளே நடைபெறுகின்ற ஒப்பனைகளைக் கண்டு களிக்கின்ற சிறுவர்கள்.

இதனிடையே இரவு ஒன்பது மணியளவில் இதோ நாடகம் ஆரம்பமாகின்றது என்ற அறிவிப்பு.

நேரம் கடக்கக் கடக்க அறிவிப்பாளரின் சுய நிலைத்தளம்பல் கட்டியம் கூறுவது போல இன்னும்... சில நிமிடங்களில்... நீங்கள்... ஆவலோடு எதிர்பார்த்த... நாடகம்... திரண்டு வாருங்கள்... கண்டு களியுங்கள்... எனக் கம்பீரமாக ஒலிக்கும்.

என்ன செய்வது தனித்து அறிவித்தலை மட்டும் கேட்டதோடு சின்னஞ் சிறுசுகள் அந்தப் புற்றரையில் உறங்கிக் கொள்ள, கும்பகர்ண வரம் பெற்ற பெரியவர்களும் சகடை - தேர் - தேர்முட்டிகளில் சகல வாத்தியங்களும் இசைப்பது போன்ற குறட்டையோடு மெய் மறந்து உறங்குவர்.

அதிகாலை மூன்று மணிக்கு திரை விலக, நாடகம் ஆரம்பமாகும். அந்நேரம் பார்வையாளர்களில் காற்பங்கினரே நாடகத்தைப் பார்த்து நிற்பர். இதனிடையே திருவிழா உபயகாரர்கள் நீண்ட நெடும் தங்கச்சங்கிலி அணிந்தவாறு சோடாப் போத்தல்களுடன் அங்குமிங்குமாக நடந்து திரிகின்ற காட்சிகளும் கண்ணில் அகப்படும்.

இவ்வாறாக நேர முகாமைத்துவம் பற்றி இம்மியும் சிந்திக்காத நாடகக் கலைஞர்களால் - அதன் தயாரிப்பாளர்களால் - ஒப்பனையாளர்களால் முற்றாக அழிந்து போனது அந்தக் காலத்து நாடகங்கள்.

இதை இப்போது இந்த இடத்தில் கூறுவதற்கான காரணம் யாது? என்று நீங்கள் யாரேனும் கேட்டால், இப்போது நம் மண்ணில் நடைபெறுகின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களும் அந்த நாடக மரபிலேயே பயணிக்கின்றன.

ஆம், கத்தல் - குளறல் - கூப்பாடு - சண்டை - சலசலப்பு - கலகலப்பு - சிரிப்பு - சீற்றம் என்பதாக கூட்டங்கள் நடக்க; எந்தத் தீர்மானமும் எடுபடாமல் அப்படியே கூட்டம் கலைந்து போகிறது.

இதைவிட வேதனை, தனித்து பிரதேச செயலர்கள் மற்றும் அரச அதிபர்கள் எடுக்கக்கூடிய தீர்மானங்களும் குறித்த கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டு கடித்துக் குதறப்படுவதுதான் துன்பத்திலும் துன்பம்.

யாம் என்ன செய்ய முடியும் பெறுமதியற்றதான இக் கூட்டங்கள் இருக்கும் வரை எங்கள் பாழ்பட்ட தலைவிதியும் தொடரவே செய்யும்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்

## சோமரத்ன மீதான விசாரணையை தீவிரப்படுத்த வேண்டும்

ரவிகரன் எம்.பி சபையில் வலியுறுத்து

(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை பன்னாட்டு விசாரணைக்குட்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் செம்மணி மனிதப்புதைகுழியானது தற்போது நாட்டிலே பாரிய மனிதப் புதைகுழியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து இதுவரையில் 412 எலும்புக் கூடுகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 390 எலும்புக் கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக சிறுவர்கள், பெண்கள், ஆண்கள், முதியோர்கள் எனப்பலதரப்பட்டவர்களுடைய எலும்புக் கூடுகளும் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கடந்த வாரம் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் இந்தப் புதைகுழி விவகாரம் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு நீதி கிடைக்க வேண்டுமென்ற பெருத்த எதிர்பார்ப்புடன் இருக்கும் பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்களுக்கு நீதி அமைச்சரின் இந்தக் கருத்து நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது.

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் பிரதான குற்றவாளியான இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிற்கு நீதிமன்றினால் தூக்குத்தண்டனை வழங்கப்பட்ட பிற்பாடு, செம்மணியில் படையினரால் 300 - 400 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதான தகவல்களை குறித்த இராணுவ லான்ஸ் கோப்ரல் வெளிப்படுத்தியிருந்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக பன்னாட்டு விசாரணையாளர்கள் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு தயாராக இருப்பதாக கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தனது மனைவி மூலம் ஜனாதிபதிக்கு சோமரத்ன ராஜபக்ஷ கடிதமொன்றினை எழுதியிருந்தார்.

மேலும் அந்த கடிதத்தில் செம்மணியைத் தவிர, அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளிலும் இராணுவத்தினரால் சடலங்கள் புதைக்கப்பட்ட தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சோமரத்தின ராஜபக்ஷவிடம் பன்னாட்டு விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப் படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

## உரிமம் இல்லாத பயிற்றுவிப்பாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

சாரதி பயிற்சி நிலையங்களுக்கு எச்சரிக்கை

வாகனச் சாரதிப் பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்றுவிப்பாளர்கள், முறையான பயிற்சி உரிமத்தைக் கொண்டிருக்க வேண்டும் என இலங்கைப் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

அவ்வாறான அங்கீகாரம் இன்றி பயிற்சிகளை நடத்தும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

இது குறித்து போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனதீர ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

பல சாரதிப் பயிற்சி நிலையங்கள் முறையான பயிற்சி உரிமங்களைக் கொண்டிருந்தாலும் நடைமுறையில் போதிய சான்றிதழ் இல்லாத நபர்களே பெரும்பாலும் பயிற்சிகளை நடத்துவதாகச் சுட்டிக்காட்டினார்.

"யாரேனும் சாரதிப் பயிற்சிகளை வழங்கினால், அவர் கட்டாயமாக சாரதிப் பயிற்சி உரிமத்தைக் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் தெரிவித்தார்.

முறையற்ற பயிற்சிகளைப் பெற்று உரிமம் பெறும் இளைஞர்களே அதிகளவில் வீதி விபத்துகளில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இளைஞர்கள் வேகத்தைக் கட்டுப்படுத்துவதில் குறைபாடுகளைக் கொண்டிருப்பதும் வீதி அடையாளங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்றத் தவறுவதும் விபத்துகளுக்குக் காரணமாக அமைவதாக அவர் விளக்கினார்.

மேலும், சாரதிப் பயிற்சி உரிமம் வழங்கும் முறைமை தொடர்பில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் மட்டுமே மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க அனுமதிக்கப்படுவதை உறுதி செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (3)

மாரடைப்பால் சாரதி மரணம்

## அம்பாறையில் விபத்துக்குள்ளான இ.போ.ச பேருந்து

(அம்பாறை)

அம்பாறை டிப்போவுக்கு சொந்தமான இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து ஒன்று வெல்லம்பிட்டி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்து சாரதிக்கு ஏற்பட்ட திடீர் மாரடைப்புக் காரணமாக பேருந்து கட்டுப்பாட்டை இழந்ததால் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த இந்த பேருந்து, வெல்லம்பிட்டிய சந்தி பகுதியில் வைத்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தினால் பேருந்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், பேருந்தின் சாரதி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பாக வெல்லம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

க.பொ.த சா/த பரீட்சை சான்றிதழ்களைப் பெற

## இணைய வழியில் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்

(கொழும்பு)

2025 (2026) ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான சான்றிதழ்களைப்பெற்றுக்கொள்ள இணையவழி முறைமையின் ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும் வழங்கப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பரீட்சார்த்திகள் எந்தக் காரணம் கொண்டும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டிய அவசியமில்லை.

பரீட்சார்த்திகள் தமது சான்றிதழ்களைப் பெறுக் கொள்வதற்காக திணைக்களத்திற்கு வருவதைத் தவிர்த்து, https://certificate.doenets.lk/certificate எனும் இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த இணையவழி முறைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, அவர்களின் சான்றிதழ்கள் அஞ்சல் சேவை மூலம் வீடுகளுக்கே அனுப்பி வைக்கப்படும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி அல்லையம்பதியில்

# சிறப்புற நடைபெற்ற சிலப்பதிகார விழா





கலாநிதி
செல்லத்துரை சேதுராஜா

அகில இலங்கை இளங்கோ கழகம் புலமை ஒலி-2026 என்னும் மேதாவிலாசத்தோடு கடந்த 12,13,14 ஆம் திகதி களில் (ஜூன் 2026)மூன்று நாட்கள் முன்னெடுத்த சிலப் பதிகார விழா வடமராட்சி அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியமை மனதிற்கு மகிழ்வளிக்கின்றது.

மிக நீண்ட காலத்தின் பின்னர் ஒரு நிறைவான கலைவிழாத் தொடரினைக் கண்டுகளிக்கும் வாய்ப்பேற் பட்டது.

நிகழ்வின் முகாமைத்துவம், கனதியான கலை நிகழ்ச்சிகள், காலத்திற்கேற்ற சுறுசுறுப் பான கலைப் படைப்பாளர்கள், மண்டபம் நிறைந்து வழி நெடுகிலும் பரந்து நின்று பங்கேற்ற தமிழ் ஆர்வலர்கள் என தமிழ் மொழி மாநாட்டி ற்கு ஒப்பான மக்கள் கூட்டம் என்பதாக, சிலப்பதிகார விழா சிறப்பாக அமைந்தது.

அகில இலங்கை இளங்கோ கழகம் நீண்ட காலமாக அதன் ஸ்தாபகர் ஆசிரியர் பரா.ரதீஸ் அவர்களின் தலைமையில் வருடாந்தம் புலமை ஒலி எனும் மகுட வாசகத்தின் வழியாக முன்னெடுத்து வரும் சிலப்பதிகார விழா வருடா வருடம் மூன்று தினங்கள் பெரு முயற்சியுடன் முன்னெ டுக்கப்பட்டு வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

இந்த இலக்கியப் பணியில் நூற்றுக்கணக்கான எமது இளைஞர்களும் யுவதிகளும் இணைந்து சிறப்பாகப் பணி யாற்றி வருகின்றனர். தற்கால எமது இளைஞர்கள் தொடர் பாக எதிர்மறையான விமர்ச னங்கள் பல முன்வைக்கப்ப டுகின்ற போதிலும் அகில இலங்கை இளங்கோ கழக த்துடன் இணைந்து பணியா ற்றும் இளைஞர் யுவதிகள் முன்மாதிரியானவர்கள்.எமது இளைஞர்கள் எப்படியாக இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமானவர்கள்.

விழா ஒன்றினை எவ்வாறு நடத்துதல் வேண்டும் என் னும் செயற்பாட்டுத்திறன் அறிவு, கூட்டொழுங்கு, கண்ணியம் முதலான தலைமைத்துவப் பண்புகள் விழா ஏற்பா ட்டாளர்களிடம் தாராளமாக மிளிர்ந்தன.

சிலப்பதிகார விழாவின் மூன்று நாள் நிகழ்வுகளும் சிறப்பான முறையில், தேர்ந்து தெரிவு செய்யப்பட்டு துறை தோய்ந்த கலைஞர்கள், அறி ஞர்கள், விற்பன்னர்களால் சிறப்புற அரங்கேற்றப்பட்டன.

ஒவ்வொரு விழா நாளிலும் தமிழுக்குப் பணியாற்றிய பெரியோர் மூவரின் பெயர் களில் தனித்தனியாக அரங்கு கள் அமைக்கப்பட்டு தமிழ் கலாசாரப் பண்பாட்டிற்கமை வாகத் தொடக்க நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடந்தேறின.

தொடர் நிகழ்வுகளின் வரிசையில் முதலாம் நாளில் சிந்தனை அரங்கு, பட்டி மன்றம் என்பனவும் இரண் டாம் நாளில் கவியரங்கு எழிலுறு அரங்கு, கதாப்பிர சங்கம், இலக்கிய ஆணைக் குழு என்பனவும் இனிதே இடம்பெற்றன. இறுதியாக மூன்றாம் நாள் நிகழ்வுகளாக தமிழ் அமுதம், இசை விருந்து, வழக்காடுமன்றம் என்பனவும் சிறப்புற இடம்பெற்றன.

உலக மாற்றங்களுடனாக மாற்றமுற்றுவரும் எமது வாழ்வியல் மாற்றங்களுடன் நிலைமாறு கட்டத்தில் எமது இளைஞர்களும் சமூகமும் பொருத்தமான வாழ்வியல் தளத்தில் தடம்பதிக்கப் படாதபாடு பட்டுவரும் இக் காலச் சூழலில், எமது இளை ஞர் யுவதிகளைப் புதுப்பிக் கப்பட்ட தலைமைத்துவப் பண்புடையவர்களாக மாற்றி வளர்க்க வேண்டியது காலத் தின் கட்டாயமாகும்.

எதிர்மறையான விமர்சனங் களைக் குறைத்து, நேர்க்கணிய அணுகுமுறை மூலம் இளை ஞர்களை வழிகாட்டி எதிர் காலத்தில் எமது தலைவர் களாக வளர்த்தெடுக்க வேண் டிய பொறுப்பு தற்காலச் சமூகத்திற்குரியதாகும்.

துரதிஷ்டவசமாக எமது தற்காலச் சமூகத்தில் அதற் கான முயற்சிகளும் அமைப் புகளும் குறைவாகவே காண ப்படுகின்றன. அதிஷ்டவச மாக அங்கொன்றும் இங்கொ ன்றுமாக சில ஒளிக்கீற் றுக்கள் தென்படுகின்றன.

அந்த வகையில் அகில இலங்கை இளங்கோ கழகம் ஆக்க பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகின்றமை பாராட்டுதற்குரியதாகும்.

புலமை ஒலி- 2026 சிலப் பதிகாரவிழா நிகழ்ச்சித்திட்ட மானது எமது இன்றைய சமுதாயத்தின் மொழி, கலை, கலாசாரத் தேவைகளையும் எதிர்காலத் தலைமைத்துவத் திற்கான திறன்களையும் வளர் த்தெடுத்து வளப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டதாகும்.

தன்னிகரில்லாத் தனித் தமிழ்க் காப்பியமான சிந்தை கவரும் சிலப்பதிகாரம் தமிழ் கூறும் நல்லுலகத்தார் அனை வராலும் போற்றிப் பயிலக் கூடிய இலக்கிய வேதமாகும்.

இதற்காக பெருவிழா எடுத்து நிகழ்ச்சிகளைத் தொகு த்தமைத்த சிலப்பதிகார விழா; சமூகத்தின் தேவை நாடியை கண்டறிந்து உணர்வூட்டிய ஒப்பற்ற சிகிச்சையெனின் அது மிகையாகாது.

"இன்றைய இளைய தலை முறையினரிடத்து பெரிதும் புகட்டப்பட வேண்டியது" மொழியின் சிறப்பே!தனிமனித ஒழுக்கமே! பண்பாட்டின் மகத்துவமே! மண்பற்றே! எம் இனவரலாறே! என்னும் தலை ப்பிலான சிந்தனை அரங்கு துறைதேர்ந்த பேச்சாளர்களால் மெருகேற்றி நிறைவாக்கப் பட்டது.

இளைஞர்களிடையே நவீன கல்வித்திறனை - விமர்சனச் சிந்தனையை வளர்த்தெடுப் பதற்கு இவ்வாறான விவாத ங்கள் அத்தியாவசியமாகும். முதலாம் நாள் நிகழ்வின் முத்தாய்ப்பான. நிகழ்ச்சியாக அமைந்த பட்டிமன்றம் மிகுந்த தரமும் தகுதியும் வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்தது.

"சிலப்பதிகாரம் எம் நெஞ்சில் நிலைத்திருக்கப் பெரிதும் காரணம்" கருத்துச் செறிவே! கவித்துவமே! பாத்திரப்படைப்பே! என்னும் கனதிமிக்க தலைப்புக்களில் தகுதிமிக்க அறிஞர்பெரு மக்கள் தமது வாதங்களை முன்வைத்து முழங்கினர்.

எல்லோர் முன்வைப்புக் களாலும் ஆக்கமும் திறனும் அமைய எமது இன்றைய சமூ கத்தினரை எமது மொழி, பண்பாடு, கலை, கலாசார மென்திறன்கள் நோக்கித் திசை மாற்றிவிடுவதற்கான அரிய கருவியாக இவ்வாறான விவாத அரங்குகள் அமையும் என்ப தனை நவீன கல்விச் சிந்தனை கள் எடுத்தியம்புகின்றன.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் சிலப்பதிகாரவிழாவின் இறுதி இலக்குகளை நிறைவேற்றின என்றே கூறுதல் வேண்டும்.

தமிழுக்கும் கலைக்கும் கல்விக்கும் அரும்பணியாற்றிய சான்றோர் கௌரவிப்புடன் கவியரங்கு, எழிலுரை அரங்கு, கதாப்பிரசங்கம் என்பவற்று டன் "இலக்கிய ஆணைக்குழு" என்னும் பொருள் பொதிந்த உணர்வுபூர்வ இலக்கிய நிக ழ்ச்சி மூன்றாம் நாள் நிகழ்வு களுக்கு மேன்மை தரும் நிகழ்வாக அமைந்தது.

சிலப்பதிகார விழாவில் மூன்று நாள் நிகழ்வுகளிலும் மதிப்புக்குரிய வாழும்தமிழ் வித்தகர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் கலந்து கொண்டு எமது இளைஞர் களையும் சமூகத்தினரையும் வழிகாட்டி வாழ்த்தியமை விழாவிற்கான தகுந்த சான்றி தழாக அமைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓகஸ்ட் 9ஆம்...

சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், திட்டமிட்டபடி பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2026ஆம் ஆண்டு மார்ச் 30 முதல் ஏப்ரல் 30 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## இராணுவத்...

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரும்புகளை வெட்டி அகற்றும் செயலில் ஈடுபட்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தினால், இராணுவத்தினரின் உடைமைகள் சில தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் உள்ள பாரியளவிலான இயந்திரங்களின் இரும்புகளை அகற்றும் பணியினை தனியார் நிறுவனம் ஒன்று முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை வழமை போன்று இரும்பு வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு காரணமாக அவ்விடத்தில் நெருப்பு பற்றியுள்ளது. கடும் காற்றுக் காரணமாக அது பாரியளவில் பற்றி எரிந்தமையால் அருகில் இருந்த இராணுவத்தினரின் மினி முகாமிலும் தீப்பற்றியதால், அங்கிருந்த இராணுவத்தினரின் உடைமைகளும் தீயில் எரிந்துள்ளன.

இது தொடர்பில் மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் மற்றும் அங்கிருந்த ஏனைய இராணுவத்தினரின் தீவிர முயற்சியால் தீ அணைக்கப்பட்டது. (ம-7)

## கேப்பாப்புலவு...

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்புலவுப் பகுதியில் தங்கள் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி பொதுமக்கள் இராணுவ படைத் தலைமையகத்தின் முன்பாக நேற்றுக் காலை 11.30 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாற்றுக்காணிகளை தாம் ஏற்றுக் கொண்டதாக ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானது எனவும் தாம் அப்படி எந்த மாற்றுக் காணிகளையும் ஏற்கப் போவதில்லை என்றும் தெரிவித்தனர்.

171 ஏக்கர் காணிகளை தொடர்ந்தும் இராணுவத்தின் 59ஆவது காலாட் படைப்பிரிவினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். எனவே எமது காணிகளை விடுவிக்க கோரி இன்றிலிருந்து தொடர் போராட்டமாக இந்தப் போராட்டத்தினை தாம் முன்னெடுக்கப் போவதாக மக்கள் தெரிவித்ததுடன் கேப்பாப்புலவு இராணுவ முகாமிற்கு முன்பாக அடையாள உண்ணாவிரதத்தில் தொடர்ந்து ஈடுபட இருப்பதாகத் தெரிவித்தனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை புகைப்படம் எடுத்து இராணுவத்தினர் அச்சுறுத்தியதாகப் பொது மக்கள் குற்றம் சுமத்தினர். (ம-7,299)

## வழக்கு விசா...

களை விசாரித்துத் தீர்ப்புகளை வழங்கும் வேகம் என்றும் குறையாது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்ற அமைச்சர், எதிர்க்கட்சிகளின் சீர்குலைந்த நடத்தைக்குப் பின்னால் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான உண்மையான விருப்பம் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாறாக தங்களுக்கு எதிராக விசாரிக்கப்படும் வழக்குகளைப் பற்றிய வலுவான அச்சமும் மிரட்டலுமே உள்ளது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், தற்போதைய நிர்வாகத்தின் கீழ் விசாரணைகள் மற்றும் செவிமடுப்புகளின் வேகம் கணிசமாக அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், இறுதி முடிவுகள் மற்றும் பெறப்படவிருக்கும் நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து பொதுமக்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும் என்றும் கூறியுள்ளார்.

மேலும், பல ஆண்டுகளாக மாறாத ஒரு கண்[illegible] கலாசாரத்[illegible] நிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சியானது, தனக்கு எதிரான சட்ட நடவடிக்கையை எப்படியாவது தடுத்து நிறுத்தும் குறுகிய நோக்கத்துடன் பாராளுமன்றத்தில் பல்வேறு அவதூறான குற்றச்சாட்டுகளை எழுப்பி செங்கோலைக் கையில் எடுக்கவும் முயற்சிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வீதி விபத்துக்...

வீதி விபத்துக்களைத் தடுக்க பாதுகாப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து பொலிஸாருக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்று கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 22ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக பாதசாரி கடவையைக் கடக்க முற்பட்டபோது வீதி விபத்தில் பெருமாள் கணேசன் என்ற 64 வயதுடைய ஓய்வுபெற்ற அதிபர் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

இவரின் இறப்புக்கு நீதி பெற்றுத்தர வேண்டும் எனவும் கிளிநொச்சி பகுதியில் பல்வேறு விபத்துக்கள் மது மற்றும் போதைப் பொருள் பாவனையினால் இடம்பெறுவதாகவும் இதற்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பு அதிகாரி உரிய பதிலை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தும், குறித்த போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி உடன் பதவி விலக வேண்டும் எனவும் தெரிவித்து நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மேற்கண்ட கோரிக்கைக்கு ஐந்து நாட்களுக்குள் உரிய பதிலை பெற்றுத்தர வேண்டும் எனவும் இல்லாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ம-7,315,316)

## தேசிய...

சட்டமூலத்துக்கு ஆதரவாக 113 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தது. சட்டமூலம் மாகாண சபைக்கு எதிரான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளதால் தாம் எதிராக வாக்களிப்பதாக தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சட்டமூலத்தில் சிறந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் தாம் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதில்லை என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக சபைக்கு அறிவித்தார். (ம-7)









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org | noolaham.media

## களப்பணி...

சந்திப்பில், கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் நந்தன ரணசிங்க, தங்களது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படாவிட்டால், 30ஆம் திகதியன்று சுகவீன விடுப்பு எடுத்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் குறிப்பிட்டார்.

கிராம நிலதாரிகள் தங்களது உத்தியோகபூர்வ கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்குத் தேவையான வசதிகளையும் படிகளையும் வழங்க அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தொழிற்சங்கக் கூட்டமைப்பு மேலும் வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## வவுனியா...

மேற்படி இரு உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளினதும் நடத்தை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பாக முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்றை ஆளுநர் நியமித்திருந்தார்.

குறித்த விசாரணை ஆணைக் குழுவினால் தீர்க்கமான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதன் இறுதி அறிக்கை அண்மையில் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விசாரணை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சான்றுகள் மற்றும் முக்கிய பரிந்துரைகளுக்கு அமைவாகவே இவர்கள் இருவரையும் பதவிகளில் இருந்தும் உறுப்பினர் நிலைகளில் இருந்தும் நீக்குவதற்கும் அவர்களது உறுப்பினர் பதவிகளை வறிதாக்குவதற்கும் ஆளுநர் தீர்மானித்துள்ளார்.

ஆளுநரின் இந்த அதிரடி நடவடிக்கை அரசியல் களத்தில் தற்போதைய முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. (ம-7)

## கதிர்காமம்...

பேசுபொருளாக மாறியுள்ளது.

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் நோக்கி பக்திப் பரவசத்துடன் நகர்ந்து கொண்டிருக்கும் வருடாந்த பாதயாத்திரையில், தற்போது ஒரு அற்புதம் நிகழ்ந்து வருகிறது. சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது கடந்த 33 நாட்களாக பக்தர்களுடன் தோளோடு தோள் நின்று பயணித்து வரும் நாய் ஒன்று இப்போது ஒட்டுமொத்த இலங்கையரையும் உற்று நோக்க வைத்துள்ளது.

முருக பக்தர்கள் இந்த நாய்க்கு "சுப்பிரமணியம்" எனப் பெயரிட்டு அன்போடு அழைத்து வருகிறார்கள். தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைக் கடந்து செல்லும் இந்த பாதயாத்திரையில் பக்தர்களைப் பார்ப்பதை விட இந்த 'சுப்பிரமணியம்' நாயைக் காண்பதற்காகவே வீதியெங்கும் மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது.

இது குறித்து பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயாவேல் சாமி சுவாரசியமான பின்னணி ஒன்றைப் பகிர்ந்துள்ளார்,

முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதியில் நாங்கள் பயணித்துக் கொண்டிருந்தபோது இந்த நாய் தானாகவே எங்களோடு இணைந்தது. இதன் உரிமையாளர் யார் என்று எங்களுக்குத் தெரியாது. எங்களை விட்டுப் பிரியாமல் தொடர்ந்து வந்ததால், இதற்கு 'சுப்பிரமணியம்' எனப் பெயரிட்டு கழுத்தில் பட்டுக் கட்டி, விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு எங்களில் ஒருவராக மாற்றி விட்டோம்.

பாதயாத்திரை முழுவதும் தூய சைவ உணவுகளை மட்டுமே இந்த நாய் உட்கொண்டு வருகிறது. வழியில் கிடைக்கும் அசைவக் கழிவுகள் எதையும் இது தீண்டுவதே இல்லை.

கூட்ட நெரிசலான பாதைகளிலும் சரி, கரடுமுரடான வழிகளிலும் சரி, பக்தர்களுக்குச் சில மீற்றர்கள் முன்னால் சென்று, அவர்களுக்கு வழிகாட்டி போல கம்பீரமாகப் பயணிக்கிறது.

திருகோணமலைப் பகுதியில் பயணித்தபோது இந்த நாய்க்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனே பக்தர்கள், அதனை ஒரு கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் சென்று உரிய சிகிச்சை அளித்து, மீண்டும் தங்களோடு அரவணைத்து அழைத்துச் செல்கின்றனர்.

தற்போது கிழக்கு மாகாணத்தைக் கடந்து, சமூக ஊடகங்களான Facebook மற்றும் TikTok ஆகிய வற்றில் பயங்கர வைரலாகி வரும் "சுப்பிரமணியம்", விரைவில் உகந்தை மலையை அடையவுள்ளது. அங்கிருந்து தான் பாதயாத்திரையின் மிக ஆபத்தான பகுதியான குமண-யால காட்டுப்பாதை ஆரம்பமாகிறது.

பல நாட்கள் நீடிக்கும் இந்த அடர்ந்த காட்டுப்பயணத்திலும் வனவிலங்குகளுக்கு மத்தியிலும் முருகனின் அருளோடு இந்த "சுப்பிரமணியம்" நாய் கதிர்காமத்தை வெற்றிகரமாகச் சென்றடைய வேண்டும் என்பதே இப்போது ஒட்டுமொத்த ஆன்மீகவாதிகளினதும் கூட்டுப் பிரார்த்தனையாக உள்ளது. (ம-7)

## சாவகச்சேரி...

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை விமர்சித்ததற்காக மட்டுமே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை உப தவிசாளர் பதவியிலிருந்து மட்டுமன்றி நகரசபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்படாமல் இருக்கும் சூழலில், எதிர்ப்புக் குரல்களை அடக்கவும் விமர்சகர்களைத் தண்டிக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆளுநரின் அதிகாரங்களையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி வருவதாகவும் நாமல் ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார். (ம-7)

A/L 2028 மாணவர்களுக்கு...
யாழ் நகரில்...
புவியியல் பாட வகுப்புக்கள்
நடைபெறும் நிறுவனம்
DMI
ஸ்ரான்லி வீதி,
(ஆரியகுளம்)
யாழ்ப்பாணம்.
– ஆசிரியர் –
N.BABU
(சனி, ஞாயிறு – 8am)
ஆரம்பம் : 27.06.2026
(சனி – 8am)
T.P : 077 936 5087
(C-5913)

31 ஆம் நாள் அந்தியேட்டி
வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் தவராசா ஜெயந்தா (ராணி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 23.06.2026 செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.06.2026) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"முத்துவாசம்",
55/1, பிரதான வீதி,
காங்கேசன்துறை. (2452)

தகவல் :
குடும்பத்தினர்
077 399 5438, 075 483 1229

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5914)
076 825 7716 (ஆகாஸ்)

சதாபொன்ஸ் கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலுசந்தி அல்வாய்
O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்
25.06.2026 வியாழக்கிழமை காலை 8.00 மணி
தொடர்புகளுக்கு :
077 309 5176, 076 126 0105, 021 226 3206
(C-5910)

### பதிலளிப்பதற்கு முன் நிதானியுங்கள்

ஒரு உணர்ச்சியான பதில் வெறுப்பின் அலையை பற்றவைக்கலாம்.
ஒரு நிமிட சிந்தனையின் மூலம் அதைத் தடுக்க முடியும்.

பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:

- இந்த தகவல் உண்மையா?
- இதை பரப்புவதால் யாருக்கு நன்மை?
- இதனால் யார் பாதிக்கப்படலாம்?

அமைதியான சிந்தனை வெறுப்புப் பேச்சை தோற்கடிக்கும்.
சிந்தனை அமைதியைப் பாதுகாக்கும்.

இந்த தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media